ஆத்ம

20-5

ஸாக்ஷாத்காரம்

உ.கோவில்லா
KOVILOOR
MADALAYAM
மடாலயம்
64இ1
R65(பொது)

ஸ்வாமி ராஜேசுவரானந்தா

20-5

ஆத்ம ஸாக்ஷாத்காரம்

20-5

உ. கோவிலூர் மடாலயம்
KOVILOOR MADALAYAM

6421
R65 (பொது)

ஸ்வாமி ராஜேசுவரானந்தா

ஒவ்வொருவரும் கடவுளின் அசையும் ஆலயம்.

*　　　*　　　*

ஒருவரும் ஒரு மதத்தில் பிறப்பதில்லை; ஆனால், ஒவ்வொருவரும் ஒரு மதத்திற்காக (ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்காக) பிறக்கின்றனர்.

*　　　*　　　*

ஒவ்வொரு முகத்திலும் கடவுள் பிரகாசிப்பதைக் காண்கின்றேன்.

*　　　*　　　*

அகில ஜகத்தும் என்னுடைய வீடு; அதிலுள்ள மக்கள் என் ஆத்மா.

*　　　*　　　*

என்னுடைய மதம் சத் சித் ஆனந்தம்.

—ஸ்வாமி ராஜேச்வரானந்தா

ஆத்ம ஸாக்ஷாத்காரம் 20-5

(முதல் பாகம்)

இது

“வேதாந்த பிதாமஹ”, “ஞான பாஸ்கர”

ஸ்ரீ ராஜேசுவரானந்த சுவாமிமஹராஜ்,

M.A., D.Litt. அவர்களால்

ஆங்கிலத்தில் எழுதப்பெற்று,

ஸ்ரீ அருட்கவி

ந. சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

Dr. T. M. P. மஹாதேவன், M.A., Ph.D.,

(சென்னை விச்வ வித்தியாலய வேதாந்தப் பேராசிரியர்) அவர்களால்

மேற்பார்வையிட்டு பிரசுரம் செய்யப்பட்டது.

கிடைக்குமிடம் :

ஸ்ரீ குழந்தைசுவாமிகள்,

தபோவனம், காவேரிப்பட்டணம் போஸ்ட்,

சேலம் ஜில்லா.

இரண்டாம் பதிவு 1952

All Rights Reserved. விலை அணு 4

இலவசமாக

1. **Shrine of Wisdom** (ஆங்கிலத்தில், 64 பக்கங்கள்) உபநிஷத் விஹாரைப் பற்றிய படங்களுடன் கூடிய வெளியீடு. $\frac{3}{4}$ அணு தபால் பில்லை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. **உபநிஷத் விஹார்** (ஆங்கிலத்தில் 64 பக்கங்கள்) ஸ்ரீ ஸ்வாமி ராஜேச்வரானந்தஜீ மஹாராஜின் உபதேசமொழிகளில் சிலவற்றின் தொகுப்பு. $\frac{3}{4}$ அணு தபால் பில்லை அனுப்புவோர்க்கு இலவசமாக அனுப்பப்படும்.

3. **ஞானரத்னமாலா** (ஆந்த்ர பாஷையில் 48 பக்கங்கள்). பிரதி தினம் பாராயணத்திற்காக உபநிஷத் மந்த்ரங்கள் அடங்கியது. $\frac{3}{4}$ அணு தபால் பில்லை அனுப்பும் முமுக்ஷுகளுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

ஸ்ரீ ராஜேசுவரானந்த சுவாமிமஹராஜ்,
M.A., D.Litt.

உபநிஷத் விஹார், கைலாஸகிரி,

பானகல் போஸ்ட், சித்தூர் ஜில்லா.

ஓம் தத் ஸத் பரப்ரஹ்மணே நம:

ஆத்ம ஸாக்ஷாத்காரம்

எவ்வகைப் பிறப்புக்களினும் மானிடப்பிறப்பு மேன்மையும் அருமையும் உற்றது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். இந்த மனிதப் பிறவியிலேயே ஆத்ம லாபத்தைப் பெறாவிடின் வாழ்நாள் வீணாகும். இதனுண்மையைக் கண்ட சிலரே "எதனை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்தவராவரோ அத்தகைய பரம் பொருள் வடிவ தங்கள் ஆத்ம ஸ்வரூபத்தை" அறிய முயன்று, நினைப்பு, மொழி, செய்கைகளைச் சதா ஜீவப்பிரஹ்ம அபேத சாக்ஷாத்காரத்தின் கண்ணேயே நிலை நிறுத்தி ஸ்வாத்மானந்தத்திலேயே நிற்க நினைக்கின்றவராவர். இவ்வாத்மாநந்த நிலையானது, தேச, கால, வஸ்து பரிச்சேதங்களுக்கு அதீதமாய், நாமரூபப் பிரபஞ்ச சம்பந்தமான சகல வாசனைகளும் நீங்கப் பெற்ற

தாய் இருப்பதுடன் ப்ரக்ஞானகன மான அந்தர் முக திருஷ்டியினால் அறியத்தக்கதாயு முள்ளதாகும். இந்த ஜன்மத்திலேயே நவத்வார புரமாகிய சரீரத்திலுள்ள ஆத்மபுருஷனை யறிந்து "நானே பிரஹ்ம" மென ஸாக்ஷாத் கரித்தல் வேண்டும். பிரகிருதியின் வசமாய் உள்ள தூக்கத்தினின் றும் ஆத்ம ஸ்வரூபத்தில் விழிப்படையவேண்டும். இங்ஙனம் அடையாமல் இம்மனிதப் பிறப்பை வீணாக்கிக் கொள்வோமே யானால் நாம் நமது பிறப்புரிமையாகிய ஸ்வேச்சையை அறவே கைவிட்டு, மறு படியும் நமக்கு ஏற்படும் பிறப்பு இன்ன தென அறியாதவர்களாய் ஏங்கித் திகைக்க நேரிடும். ஆகையால் நாம் மாயா வசத்தர்களாகாமலும் அதன் சக்தியாகிய ஆவரணத்தால் மறைக்கப் படாமலும் நமது சுய வடிவமாயுள்ள ஸத்து, சித்து ஆநந்த ஸ்வரூபத்தை உணர்வோமாக. இதுதான் ஸகல மத வாழ்க்கையின் முடிவான சித்தாந்தமாம்.

இந்நிலையில்தான், கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா திருவாய் மலர்ந்தருளியவண்ணம் "நானே எங்குமாய், என்றுமாய் எல்லாமாயுமுள்ள ஆதியந்தரகித பரம்பொருள்" என்றும், "ஸோஹம்—அதுவே நான்" என்று நமது வைதிக ரிஷிகள் ஸ்வாநுபவவேத்தியமாய் தெரிவித்தவாறும், "பிரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா ஜீவோ பிரஹ்மைவ நாபரஃ—பிரம்மமே யுள்ளது. (காணப்படும்) இச்சகம் (கயிற்றரவுபோல்) மித்தையே; ஜீவன்பிரஹ்மமே மற்றன்று" என்று ஜகத்குரு ஸ்ரீ பகவத் பாத சங்கராசாரியார் அதி கம்பீரமாய் இடிமுழக்கம்போல் திருவாய்மலர்ந்தருளியவாறும், சந்தேக விபரீதங்களற அபரோக்ஷமாய் உணர்தல் கூடும்.

"ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய ச்ரோதவ்யஃ மந்தவ்யஃ நிதித்யாஸிதவ்யஃ-' ஆத்மாவே, அறியத்தக்கது கேட்கத்தக்கது. தியானிக்கத்தக்கது. உணரத்

தக்கது” என்றும், அஹமேவதத்— நானே அதுவென்றும் சுருதிகள் கோஷிக்கின்றன. அக்ஞான கல்பித வாச்யமான நான் த்யாஜ்யமானது. அந்வயவ்யதிரேக யுக்திகளால் குருமுக மாக மஹா வாக்யார்த்த ஜன்ய ஞான அநுபவமாகும் நான் லக்ஷ்யமானது. இந்த லக்ஷ்யமான நான்தான் க்ராஹ்யம். நானே பிரஹ்மமா யிருக்கிறே”னென் னும் மஹா வாக்கியந்தான் அத்யாத்ம வித்தையாகிய ஏணியின் உயர்ந்த படி யாகும். இவ்வாக்கியார்த்த ஞானந்தான் ஆத்மப் பிரகாசத்தின் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமாகும்.

இங்ஙனம், தன்னைத்தானறிந்து வியாபகமாய் விளங்காமல் தீனத்தன்மை பொருந்திய பந்த (கட்டுப்பட்ட) ஜீவனாய் இருக்க ஒருகாலும் எண்ணுதல் கூடாது. இரவும் பகலும் அதீதப்பிரஞ்ஞையின் ஸத்பாவத்தை யுணர்க. இவ்வுணர்ச் சியின் பொருட்டு, தேகம், இந்திரியங்கள்

அந்தக்கரணமாகிய உபாதிகளின் சம்பந்தத்தை யறவே ஒழித்தல் வேண்டும். ஸ்வயம் பிரகாசமாகிய எல்லையற்ற ஆத்மக்கடலின் ஒரு சிறு குமிழியைவிட அற்பமான பரிச்சின்ன தேக பாவனையைக் களைந்து அகண்டாத்ம ஸ்வரூபமாகிய ஜோதியை ஏற்றுக. பிறருக்கு உபதேசிக்கும்வண்ணம் ஒழுகிக்காட்டுக. அநிருத, ஜட, துக்கரூப உலகத்தின் பேதவடிவ பந்தத்தை யொழிப்பதே ஆத்மஞானத்துக்கு சாதனமாகும்.

இத்தகைய உயரியதோர் ஆத்ம ஸாக்ஷாத்கார தத்துவ முடையவனாய், எல்லாம் அற்ற நிலையில் பொங்கியெழுவதாயும் அவிச்சின்னமாயும், அவிநாசியாயுமுள்ள ஆத்மாநந்த வெள்ளத்தைப் பெருக்குக. எந்த க்ஷணத்தில் அநாத்ம ஜடபாவனை யொழிகிறதோ அந்த நிமிஷமே உன்னுடைய ஸ்வரூப மோக்ஷ ஸாதன ஸமாதிநிலை வெளியாகும். இந்த அஜட (சித்து) ரூப ஸமாதிதான் அழி

வற்ற ஆத்ம ஸ்வரூபத்தில் விழிக்கச் செய்வதாகும்.

ஆதலின் அநாத்மாகார உலக எண்ணங்களைப் பிரயத்தனஞ்செய்து ஒழித்து, ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்வதில் ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கவேண்டும். இத்தகைய ஸ்வாத்ம மஹிமையின் சாஸ்திரஞானம், அனுபவமாய் இருக்கும்படி செய்க. அநுபவமற்ற கேவல சாஸ்திர ஞானம் பதறுபோன்றதாகும்; அநுபவத்தோடு கூடிய சாஸ்திர ஞானம் வாஸனையோடு கூடிய பொன் மலர் போன்றதாகும்.

உன்னுடைய ஜீவிதத்தில் வேதாந்தத்தின் அபேத தத்துவமானது உணர்வுடன் ஆசரிக்கப்பட்டு வருதல் வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. உன்னிடத்தில் ஸ்வதஸ்ஸித்தமாயுள்ள ஸத்தையை ஸ்புரிக்கச்செய். நாமரூபப் பிரபஞ்ச அத்தியாஸத்துக்கு அதிஷ்டானமாயுள்ளதும், எங்கும் அந்

தாயாமியாயுமுள்ளதுமான ஸத்தையை எப்பொழுதும் பார். அப்பொழுது தான் பரிபூர்ண நிலையை அடைவாய். ஸகல அத்தியாசங்களுமற்ற பிரஹ்மா நந்த நிர்வாண நிலையின் கண்ணேயே நிலைபெற்றிருக்க நீ ஸதா விரும்புவா யாக. அத்தியாச நீக்கமே அதிஷ்டான அபரோக்ஷம், அனர்த்தநிவர்த்தியே ஆநந் தப்பிராப்தி. இந்த தத்துவத்தை குரு குல வாசத்தில்தான், உணர முடியும்; தர்க்கத்திலும் யுக்தியிலும் அன்று. "அஹம் பிரஹ்மாஸ்மி" என்னும் அப ரோக்ஷ ஞானம் திடமாய் உண்டாய காலத்தில் சுவர்க்க நரகங்களும், தீர்க்க ஸ்வப்னமாகிய இந்த உலக அனுபவமும் கயிற்றில் அரவுபோலக்கெடும். ஸத்தா ஸ்வரூபமாகிய கடலில் காணப்படும் இந்த உலகம், வெடித்து ஸ்வரூப நாசமாதற் குத் தயாராயுள்ள சிறுநீர்க் குமிழி போன்றது; ஆனால் உன்னுடைய ஸ்வரூபமோ எப்பொழுதும் அழியத் தக்கதன்று.

லௌகிகபரிச்சின்னங்களற்ற மனோகரமான துரீயாதீதமெனும் உபசாந்த நிலையில் செல்க. இந்நிலைதான் இராப் பகலற்றவிடம்; இதுதான் நிர்த்தொந்துவநிலை; ஸகல விஷயங்களின் பற்றற்ற விடம் இதுவே. இதுதான் நாமரூபங்கள் நாசமாகும் மயானம்; இதில் விளங்கும் பொருள் என்றும் உள்ள நீயே. பிரத்தியக்காய் (உள்ளே) உள்ள ஸதாநந்த ஸ்வரூபத்தை உன்னுடைய ஸஹஜ லக்ஷ்யமாய் அத்விதீய ஏகரஸத்தைத் தடையின்றி அறிவாய்.

உன்னுடைய வாழ்நாள் முழுமையும் ஆத்மலாப முயற்சியிலேயே செல்க. ஸ்வபாவமாயுள்ள உன்னுடைய உண்மை நிலையோடு உன்மனம் ஒற்றுமைப்பட்டுப் பரிசுத்தமாகுக. ஆத்ம ஸாக்ஷாத்காரம் போலவே விளங்கும் ரஸாஸ்வாதத்தில் மயங்காமல், உண்மையான ஞானத்தில் பழகு. ஆத்மாவின்மேல் கற்பிக்கப் பட்ட ஆரோபமும், மனதின் பிரமையும்,

ஜகத்தின் இந்திரஜாலமும் அற்றொழியும் படி ஆத்மஸ்வரூபத்தை அணுகி, "அவன், அவள், அது"வென்னும் ஸகல பேத நாட்டத்தை யொழித்து அபேத நாட்டத்தைக் கடைப்பிடி; தானல்லாத உடம்பைத் தானென்பதனால்தான் ஜனன மரண அனர்த்தம் உண்டாகின்றது. எந்த க்ஷணத்தில் ஸர்வ வியாபகமான ஆத்மாவை, மயக்கத்தினால், பரிச்சின்னப்பட்டதாகக் கருதுகின்றனையோ, அந்த க்ஷணத்திலேயே உனக்குக் கேடுண்டாயது; எந்த காலத்தில் வியாபகமான பரம்பொருளே நான் என்று அபேதப்படுகின்றாயோ, அப்பொழுதே ஸ்வேச்சையை அடைகின்றாய். கட்டுப்பட்டவனென்று நினைத்தால் கட்டுப்பட்டவனே. பந்த மோக்ஷங்களுக்கு மனமே காரணம். ஆதலின் ஸத்ஸ்வரூப நிர்க்குண ஆத்மாவை அடையச் சீக்கிரம் முயல்க. முயன்று அநவரதமும், தன் மஹிமையிலேயே ஸ்வயம் பிரகாசமாய் விளங்கும்

ஆத்மா நுபவத்திலேயே இருத்தல் வேண்டும்.

நான், நீ, அவன், அதுவென்று இங்கே காணப்படும் பேதஉணர்ச்சிகள் யாவும் அநாதியாய்த் தொடர்ந்துவரும் போக்த்ரு போக்கிய சம்பந்தத்தினு லுண்டானவையே யாகும். இவையா வும் அத்தியாசமே. இவற்றிற்கு அதிஷ் டானமாகிய நிர்விகார அஸங்க சுத்த ஆத்மா, ஸதா பிரகாசித்துக்கொண்டிருக் கிறது. கர்த்ருத்வ, போக்த்ருத்வங்களை ஆத்மாவின்மேல் ஏற்றுதே. அவை உன்னுடைய கற்பனையாதலால் உடனே ஒழிப்பாயாக. "எனது" "உனது" என்பன சொன்மாத்திரமேயாகும். உன்னை நீ சந்தேக விபரீதங்களற அறி கிறவரையில், தேச, கால, நிமித்தாதி ஸகல அநர்த்தங்களிலிருந்து விடுபடுதல் என்பது கிடையாது; மற்றே சுக துக் காதிகளாலும், உன் மனமானது மொத் துண்டு அலைந்துழன்றுகொண்டே யிருக்

கும். மனஸ் தத்துவத்தில் அமைந்துள்ள பரஸ்பரவிருத்த பிரவிருத்தி நிவிருத்தி களால் முறையே பந்தமும் மோக்ஷமும் உண்டாகின்றன. மோக்ஷ காரணமாகிய நிவர்த்தி தத்துவத்தைக் கடைபிடித்து தேகயாத்திரை நடத்துவதே ஸர்வஸங்க பரித்தியாக ஸந்நியாசமாகும்.

தஹராகாசத்தில் (புத்தியாகிற குகையில்) பிரகாசிக்கும் ஆத்மஸ்வரூபத்தை யறிக. ஹிருதய புண்டரீக சிதாகாசத்தில் ஆத்மாவைத் தரிசிப்பதாவது ஸகல நாமரூப அத்தியாச நீக்கத்திலேயேயாம். வியஷ்டி பேதத்தை நீக்கி அதீதமாயுள்ள ஸ்வரூபத்தை உணர்க. வியஷ்டி பேதத்தை (கண்டபாவனையை) விடுவதனால் எல்லாமாயும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும் விளங்கும் பரமமேன்மையான நிலையையடைவாய். கற்பித ஜீவ பாவனையால் விளைந்த பந்தமானது இனி உன்னை வருத்தாது. அபரோக்ஷாநுபூதியில் விளங்கும் அகண்டாநந்த ஜோதி

யைப்பாராமல் பார்ப்பாய். இங்ஙன மன்றி உலக ஆசைகளால் விழுங்கப்பட்டு நிற்கின்ற சுழற்காற்றில் சிக்கிய சிறு துரும்புபோல் வருந்துவாய். ஆதலின் பஞ்சகோசங்களுக்கு அடிமையாகாமல், ஸ்வாபவ நித்திய ஸித்த ஸிம்ஹாஸனத் தின்மேல் அமர்ந்து ஸ்வராஜ்யத்தைப் பெறுவாயாக. "ஏகமேவ அத்விதீயம் பிரஹ்ம" மென்று அபரோக்ஷமா யறிந்து ஆத்ம ஸ்வேச்சையைப்பற்றிப் பாமரர்களும் நன்கறியும்படி தம்பட்ட மடிக்க.

நீர்க்குமிழி போன்ற வியஷ்டி ஜீவ பாவமானது அகண்டமாகிய கடலில் அழிந்து அதன் வடிவமாகுக. ஸர் வோத்கிருஷ்டமாகிய அந்த அகண்ட சமுத்திரத்தின் சிறு அலைகளே ஸர்வ மும் ஆம். இக்கடலைத்தரிசி. உன் மன மானது நித்தியாநந்தக் கடலில் திளைக்க அதனால் உண்டாகும் நிரங்குசத்திருப் தியும் நிரதிசயாநந்தமும் உன் முகத்தில் விளங்கட்டும்.

லௌகிக மனோவிருத்திகளின் மெய்ப்பாடுகள் விளங்காமல், பரிபூர்ண ஆத்ம நிஷ்டையின் ஸஹஜநிலை முகத்தில் விளங்கட்டும். அநாதியாய்த் தொடர்ந்துள்ள அஞ்ஞான அந்தகாரத்தை நீக்கும் ஞான சூரியனாய் விளங்கு. மனம், இந்திரியங்கள், சரீரம் முதலியவற்றைத் தத்தம் காரியங்களில் அபிமானத்தோடு பிரவிர்த்திக்காவாறு தடுக்கத் தக்க ஆத்மஞானமாகிற விளக்கைக் கைக் கொண்டால், நீ போக்கிய போக்த்ருத்வ மார்க்கத்தில் அடிகூட வைக்க மாட்டாய். விபரீத பாவனையால் பேதத்தைக் கண்டு பயங்கொண்டு அழியமாட்டாய். எங்கும் வியாபித்துள்ள "தத்சத்" ஸ்வரூப உன் நிஜவடிவத்தை அறிவாய்.

வெளியே உள்ள ஜனங்களை உள்ளே வரவொட்டாமல் தடைசெய்ய வேண்டுமென்றால் உள்ளே உன்னைத் தடை செய்துகொள்ளாமல் முடியாது; ஆதலால் வெளியாரைத் தடை செய்வ

தெனில் உள்ளே உன்னைத் தடை செய்வதுதான். இங்ஙனமே பிறருக்குத் தீங்கு செய்யவேண்டுமென்று நீ நினைத்தால் உனக்குத் தீங்கு செய்துகொள்ளாமல் அங்ஙனஞ் செய்ய முடியாது. ஆதலால் பிறருக்குத் தீங்கு செய்வதாவது உனக்குத் தீஙகு செய்வதே யாகும். "நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்". ஏனெனில் நீ யொருவனே உலகத்தில் உண்மையான பொருள். சூரியன், சந்திரன், ஆகாசம், பிரகிருதி. சராசராத்மகமாய ஸகல அண்டங்கள், யாவும் உன்னுடைய கற்பனையே. உன்னுடைய பிரகிருதியே உன்னை மறைத்து உலகமாகிய கனவை உன்னிடத்தில் உண்டாக்குகின்றது.

பிரபஞ்சத்தில் எதுவும் நீயல்ல; உன்னையன்றி உலகத்தில் ஒன்றும் இல்லை. ஆதலின் ஸகல விஷயங்களிலும் உன்னுடைய உண்மை வடிவத்தைப்பார்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு". உலகத்தில், "இழுத்துக்கொள்" என்பதுதான் உளவானபதம். இதை விபரீதமாய் "தள்ளு" என்று சிலர் அறிகிறார்கள். இதற்குக் காரணம் சகலத்தையும் ஆகர்ஷிக்கும் மையம் தன்னிடத்தில் இருக்கின்றதென்று அறியாமையே. ஸர்வசக்தியுள்ள அஸங்க ஸத்தாஸ்வரூபமே நீ, உலகத்தில் இந்த அத்விதீய நிலையை அறிய உனக்கு ஒரு கேடுமில்லை.

ஊழ்வினைப் பயனாய் வருகின்றதென்று அடிக்கடி நினைக்கும் ஆபத்துகளுக்கும் பயத்துக்கும் மனத்தில் இடம் கொடாமல் நீக்கு. உண்மை நோக்கில் ஊழ் என்பதொன்றுண்டென்று ஏற்படுவதில்லை. உண்டெனில் அஃதுன் கற்பனையேயாகும்.

கற்பிதமாயுள்ள இந்த பிராரப்தம் ஸர்வஞ்ஞ ஸர்வ சக்தவடிவ உன்னுடைய ஆத்ம ஸாக்ஷாத்கார க்ஷணத்திலேயே

நாசமாகின்றது. உன்னுடைய வாழ் நாளின் ஒவ்வொரு க்ஷணமும் பரிபூர்ண பாவத்தை அடைவதிலேயே செலவழி யட்டும். இங்ஙனம் நாமரூபாதிகளை யொழித்து ஜீவனைச் சிவமென அறி விக்கும் ஆத்ம ஜ்ஞானாம்ருத தடாகத்தில் ஸதா பானஞ் செய்துகொண்டிருப் பாயாக.

எதையறிந்தால் எல்லாமறியப்பட்ட தாமோ அப்படிப் பட்டதையறிந்து என்றும் ஸ்வேச்சையாய் இரு. நெருப் பிற்கு ஒருபொறி எங்ஙனம் அம்சமோ, அங்ஙனம், நீ பிரஹ்மத்தின் அம்சம் அன்று. ஆனால் நீ பிரஹ்மமே. இங்ஙனம் திடமாய் அறிகிறவரையில் பயம் நீங்காது. எப்பொழுது, எல்லா மாயும் பூர்ணமாயும் அரிகின்றனையோ, அப்பொழுது உனக்குத் துன்பிழைக் கும் அன்னியப்பொருள் இவ்வுலகில் இல்லவேயில்லை. உண்மை விளக்கத் தோடு அபேதப்பட்டுள்ள உனக்கு,

நானுவித பின்னப்பொருள்களோடு கூடிய இந்த உலகத்தோற்றம் நசிக்கும் போது ஆச்சரியமுண்டாகாது. பஞ்ச கோசங்களையும் "நேதி நேதி" "இதுவல்ல இதுவல்ல" என்று களையுங்கால் அவற்றிற்கு விலக்ஷணமாய் அவிநாசியாய் ஸதோதயமாய் விளங்குவது எதுவோ அதுவே நீயாகிற ஆத்மாவாம். வேதங்கள் உன்னுடைய மேலாகிய ஸத் ஸ்வரூபத்தை "நேதி நேதி" பதங்களால் நிர்ணயிக்கின்றன. நீ மோக்ஷ ஸ்வரூபியே. உனக்குப் பந்தம் இருந்ததும் இல்லை; மோக்ஷம் வந்ததும் இல்லை. எப்பொழுது ஆத்ம ஸ்வரூபத்தை யுணர்ந்து ஆத்மாகாரமாகவே நிலைத்து விடுகின்றனையோ, அப்பொழு நாமரூபப் பிரபஞ்சத்திற்குரிய சுகதுக்காதி துவந்துவங்கள் நாசமாகின்றன. ஆதலின் இத்தகைய நிலையிலேயே ஸதா இருப்பாயாக. ஸகல அநர்த்தங்களுக்கும் காரணமாகிய தேஹோஹம் பாவனையைவிட்டுச்

சிவோஹம் அனுபவத்தையடை, எப்பொழுதும் சிவமாயிரு, ஒருகாலும் ஜீவனாய் இராதே.

ஞான பூமியின்கண் நிலைபெற்று நின்று, ஸகல ஜகத்திற்கும் காரணமாயும் காரண காரிய அதீதமாயுமுள்ள பரமாத்ம நிலைக்கு விரைவிற்செல்க. பரமாத்ம ஸ்வரூபம் அறியப்பட்ட போதே உன்னுடைய சம்ஸார மயக்கம் தெளிகின்றது. மூன்று அவஸ்தைகளுடைய பாவாபாவங்களின் சாக்ஷியாய் விலக்ஷணமாய் பிரகாசகமாய் பிரத்யகாத்மாவாயுள்ள உன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை யறிதல் வேண்டும். அலையும் ஜடமனதைச் சாந்தப்படுத்திச் சித்ஸ்வருபத்தையறிக. பித்தேறிய ஜனத்தின்கண் பொங்கிப் பெருகும் காமாதி விருத்திப்பிரவாகத்தைத் தடுத்து அமைதிப்படுத்துக. சோம்பலாய் இராதே. பரபக்தியுடையவனாயிரு. அதிகம்பீரமான உன் ஆத்மஸ்வரூபஸத்

தை உன் மனதில் பிறழ்ச்சியின்றி நன்கு விளங்குக. ஆத்மீய சிந்தனையில் உன் புத்தி நிலைக்கட்டும். உன் மனம் தைரியத்தைப் பெற்றுச் சலனமற்ற ஆத்ம ஸ்வரூபமாகி, நாமரூபப் பிரபஞ்சத்தின் விசித்திரத் தன்மையைப் பொய்யாக்கட்டும். காரியஸகித அஞ்ஞானம் ஜெயிக்கப்படட்டும். அப்பொழுது நீ சுலபமாகவும் சுகமாகவும் ஜன்மக்கடலைத் தாண்டுவாய்; பரம சாந்த நிலை தோன்றும்; உன் மனமும் ஆநந்தவடிவமாகும்.

உள்ளொன்று நினைத்துப் புறமொன்று பேசாதே. சொல்லும் வண்ணம் செய்யமுயல்க. காரியப்படாத சொற்கள் பயனற்றனவேயாகும். ஆதலின் ஆத்மஸ்வரூபதத்துவத்தை சாஸ்திரத்தால் அறிந்து வாயால் பேசுவதை ஒழித்து சுரோத்திரிய ப்ரம்மநிஷ்டராகிய குருவின் உபதேச மஹாவாக்யத்தின் அர்த்த ஞான அனுபவத்துடன் ஒழுக முயல். காணப்படும் இவ்வுல

கத்திற்கும் கேழ்க்கப்படும் சுவர்க்காதி லோகாந்தரங்களுக்கும் உபாதான நிமித்த விவர்த்த காரணமாகிய பரமாத்மாவை உள்ளபடி அறிக. நாமருப நாட்டத்தின் நீக்கமே ஸகல அநர்த்த நிவர்த்தியும் உபசாந்தமும் ஆம்: இதுதான் அபரோக்ஷாநுபூதிக்குச் சாதனமாகும். ஸர்வஸங்க பரித்தியாகமும் இதுவேயாம். நாமரூபப் பிரபஞ்சத்தில் சிலவற்றை விடுவது ஸந்நியாஸமன்று. சிலவற்றை விடுவதென்பது மற்றுஞ் சிலவற்றைக் கொள்வதேயாகும். இங்ஙனஞ் சிலவற்றை நீக்கி சிலவற்றைக் கொள்ளுதல் விருப்பு வெறுப்புக்களின் காரியமேயாகும். இது ஸர்வ ஸங்க பரித்தியாகமன்றும். பரிச்சின்ன பேதப் பிரதீதிக்குக் காரணமாகிய நாமரூப நாட்டத்தை யொழிப்பதே எல்லாப் பற்றுக்களேயும் துறந்த உள்ளத் துறவாகும். இதுவே அகண்ட பாவனையாம். ஆத்ம பிரத்தியக்ஷத்தின் பொருட்டு அறியவேண்டிய அன்னியப் பொருள்களும் இல்லை; அறியக் கூடா

தனவும் இல்லை. என்றால் தன்னைத்தவிர அந்நிலையில் வேறாக வேறொன்றுமில்லை யென்பது கருத்து ஆதலின் பரிச்சின்ன பேத புத்தியையொழித்து உள்ளத்துறவுபூண்டு உன்னுடைய நிஜ வடிவத்தை யறிக.

உலகம் விழித்திருக்கும் இடத்தில் நீ தூங்கு; அது எங்கே தூங்குகின்றதோ அங்கே நீ விழித்திரு. மறுக்க முடியாத ஸத்தையையுடைய உன் ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தில் எப்பொழுதும் விழிப்பாயிரு. அத்விதீய அபய ஸ்வரூப ஆத்மாவோடு அபேதப்பட்டு நிற்கும் நிலையில், இந்திர ஜாலம் போன்ற இப்பிரபஞ்சத்தில் உன்னை பயமுறுத்தவும் உன்னால் பயமுறுத்தப் படவும் யாதொரு பொருளுமில்லை. பேதநாட்டமே நாசமாய் விட்டபடியால் இது அதிக ஆச்சரியமான ஸஜாதீய விஜாதீய சுகதபேதமற்ற நிலை. இந்நிலையில் கொல்பவனுமில்லை, கொல்லப்படுபவனுமில்லை,

அழிக்கிறவனுமில்லை, அழிக்கப்படுபவனுமில்லை, இதுவென்பதுமில்லை, அதுவென்பதுமில்லை. யாவும் உன் வடிவமாயிருக்கின்றன, சிநேகிதனும் விரோதியும் நீயே. இத்தகைய திடஞானந்தான் வாழ்நாளை பயன் பெறச் செய்வதாகும். கண்டிதமாயுள்ள உன் அற்பவியஷ்டி சரீர பாவனையை அறவேயொழிக்கின் நீ சம்ஸார பந்தத்தினின்றும் நீங்கினவனேயாவய். உன் ஜன்மம் நிஷ்பலமானதாகாது. நித்திய நிரதிசயாநந்தம் எனும் மகுடம் சூட்டப்பெறுவாய். இதுதான் பரமாத்மாவின் ஸ்வரூபமாகவே விளங்கும் ஒப்புயர்வற்ற புகழ்ச்சியைப் பெற ஏற்பட்டுள்ள ஒரேவழியாகும். பரம்பொருளோடு அபேதப்பட்டிருக்கும் உண்மையான வாழ்க்கையில் உன் ஆத்மாவை விழிப்படையச் செய்க.

பிரவிருத்தி மார்க்கத்தினல், நாமரூப உலகத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிருய். ஆதலால் இப்பொழுதே உன் ஆத்ம

ஸ்வரூப சேதன பூமியையுடைய உள் முகமாய்த் திரும்பு. அப்பொழுது நாம ரூபங்களுக்கு அந்தர்யாமியாய் விளங்கு வதை நீ அறிவாய். பிரமையின் காரிய மாகிய உலகத்தின் பொய்த் தோற்றத் தால் உன் மனம் அபகரிக்கப்பட்டிருக் கின்றது. மெய்யறிவு பெற உன்னிடத் தில் மறைந்திருக்கும் ஆத்மீய சக்தியை நன்கு பிரகாசப்படுத்திப் பாரமார்த்திக சத்தையை யுணர்வதற்குறியவாறு உன் மனத்தை உயர்த்தவேண்டும். அதாவது தூய்மையாக்கவேண்டும், ஜீவத்தன்மை பல அசுத்த எண்ணங்களின் கூட்டமே யாதலின், ஜீவனுகிற எவனும் எண்ண மற்றவனுயில்லே. உபயோகமற்றவனுயு மில்லே. ஜீவத்தன்மைக்குக் காரணமான அசுத்த எண்ணங்களே யொழித்து, ஒருவன், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குச் சாதனமான சுப வாஸனேகளேக் கொள் ளக் கூடும்; இவன் தான் ஆத்மலாப முயற்சியில் முழுமனதுடன் பிரவிருத்தி ப்பவனுவான். எப்பொழுதும் மனத்

தைப் பஞ்ச கோச அபிமானத்திற் சிக்கும்படி விடாதே. உன்னுடைய ஸ்வபாவமான உயர்ச்சியினின்றும் உன்னைத் தாழ்த்தும் அடிமை வாழ்க்கையில் செல்லாதே. அது உன் ஸ்வப்பிரகாசத்தை மறைக்கும் வாழ்க்கையாகும். அஞ்ஞான இருளில் சிக்கிக்கொண்டு ஆயுள்பரியந்தமும் "இருள் இருள்" என்று கதறியழாதே. உன்னுடைய அழுகையால் இருள் ஒரு காலும் நீங்காது. ஆத்ம விசாரமாகிய தீக்குச்சியை ஏற்று. இருள் ஏது! இங்ஙனம் உன்னுடைய வாழ்க்கையைப் பிரகாசமாயும் இதரர்களுக்கு வழி காட்டியாயிருக்கும்படியும் செய்க.

கற்பித ஜீவத்தன்மையை நீக்கிக் கொள்ள உறுதியாய்ப் பிரதிஞ்ஞை செய். அப்பொழுதுதான் உன் மனதிலுள்ள ஆந்தரப்பற்றுகளெல்லாம் ஒழிந்து மோக்ஷ கீதத்தைப் பாடமுடியும். உன்னுடைய வாழ்நாள் முழுதும், பரிசுத்த மனம் அத்வைதாநந்த லஹரியைப்

பருகி அதிலேயே திளேக்கட்டும். இந்த உறுதி உன் ஹிருதயத்தில் வேரூன்றி நன்கு தழைக்கட்டும். ஆத்ம ஸ்வரூபத்தைத் தேட ஆரம்பித்தால் அது ஆந்தரத்திலன்றிப் பாகியத்தில் அகப்படுகிறதேயில்லே. இதுதான் உண்மை. உன்னே நீ உணர்ந்தால் எல்லாம் உணரப்பட்டவையே. இத்தத்துவத்தினேயறிந்து மனிதப் பிறவியின் பெரும் பயனே யடைய முன் வந்து தைரியமாய் விழித்திரு. இதுதான் உன் ஆத்மக் கடலிலுள் ஆநந்தமுத்தைப் பொறுக்கும் வழி. உன் விருத்தியைச் சற்று அந்தர் முகப்படுத்திஞல் மனம் ஸத்துவாகாரப்பட்டு மைத்திரீ, கருணே, முதிதை உபேக்ஷை முதலிய சுபவாஸனேகள் எல்லாம் ஒருங்கே ஏற்பட்டுவிடுகின்றன. நிச்சலமாய், தைலதாரை போன்ற இந்த ஆத்மகோசர விருத்தியிலேயே பழகி ஸச்சிதாநந்த அகண்ட ஆத்ம ஸ்வருபத்தையடை. ஸஜாதீய விருத்திப் பிறவாகமாகிற நிதித்தியாஸனம் ஸமா

திக்குச் சாதனமாகும். ஜீவயாத்திரைக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரமே சிறந்த விளக்காகும். ஆத்ம ஞானியின் வாழ்க்கையே வாழ்க்கை; மற்றவர் உயிர்த்திருந்தும் இறந்தவரே யாவர். உனக்குத் தேகாபிமானம் அறவேண்டும். அப்பொழுது தான் இந்த உலகமாகிய நாடக சாலேயில் அறிவோடு நடக்கமுடியும். நீ ஒரு சக்ரவர்த்தியாகவோ அல்லது தோட்டியாகவோ நடிப்பதாக வைத்துக் கொள்வோம். அங்ஙனம் நடிக்கும் போது நீ பூண்டிருக்கும் வேஷத்துக்குத் தக்க வண்ணம் நடித்தாலும், உண்மையை மறந்தவனே; ஏனெனில் நீ அரசனுமல்ல தோட்டியுமல்ல. மற்ருே நாசரகிதமான நித்திய ஆத்மஸ்வரூபன். உன் ஞானபார்வையை, மனேகற்பிதமான நாமரூபப் பிரபஞ்சத்தோற்றமாகிற இந்திரஜாலமும், பிரகிருதியின் காரியங்களான விஷயாதிகளும், மறைக்காமல் இருக்கட்டும். சப்தாதி விஷயப் பிரபஞ்சம் கேவலம் பொய்த் தோற்ற

மேயாம். ஆகையால் உன் நித்தியா நித்திய விவேகதீபத்தினால் "உள்ளது ஒன்றே; மற்றைய அனைத்தும் பொய்யே" யென நிச்சயித்து ஸகல பேத உணர்ச்சியாகிற இருளை யோட்டு வாயாக. இதுதான் ஞானவாழ்க்கை.

உன் மனோவிருத்திகள் யாவும் ஆத்ம ஸ்வரூபத்தில் லயத்தை யடையட்டும். நீ ம-ா-ஸ்ரீயுமல்ல; ஸௌபாக்கியவதியு மல்ல; ஆண்பால் பெண்பால்களில் சேராத அலியுமல்ல. இந்த உலகத்தில் ஸகல பிரமாணங்களுக்கும் எட்டாத வடிவினன்: நாமரூபாதிகளுக்கு அதீத மானவன். இந்த ஞானத்தோடு ஸகல நாமரூபப் பிரபஞ்சத்தை உனக்குள் லயப்படுத்துவாயாக. திருப்தியாயிரு. மனஸ்தத்துவத்தை நன்றாய் உணர்க. உணர்ந்தால் சமார்த்தியமுள்ள ஸார திக்கு அடங்கி நடக்கும் குதிரைகளைப் போல் உனக்கு, உன் மனம் அடங்கி நடக்கும். மனத்தின் பரிபாகத்தை

(நன்மையை) எண்ணங்களால் அறிக. உன்னுடைய அநுபவமாகிற ஒவ்வொரு புஷ்பத்தினின்றும் ஸாரத்தைக் கிரகிக்க, உன்னுடைய ஸ்வாநுபவமே உனக்குச் சிறந்த குருவாகும். அநுபவத்தைவிடச் சிறந்த குரு இல்லை. நீ செய்யும் சமானிய கர்மங்களிலிருந்து சிறந்த தத்துவங்களை யறியக்கூடும். கர்மத்தின் தத்துவத்தை நன்கறிந்து, உன்னை விவகாரத்திற்கு இழுத்துப் பந்தப்படுத்தும் அவித்தை யென்கிற விலங்கை உடைத்தெறிக. ஸதா உன் மனம் ஸ்வரூப நிலையில் மூழ்குக. அது எப்பொழுதும் ஸன்மார்க்கத்தையே நோக்கட்டும். பிரத்தியகாத்மாநுஸந்தானத்தைத் தவிர மற்ற அநாத்ம எண்ணங்களை உன் மனத்தில் இருத்தாதே. சிதாகாசத்தில் (ஜீவப் பிரஹ்ம ஐக்கிய) அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தினால் உற்பூதமான ஆநந்த வெள்ளம் பொங்கிப் பெருகி அகண்டமாய் நிலைக்க. உன்னுடைய அகண்ட அன்பாம் மலரின்

சிறந்த மணமானது எங்கும் வீசிப் பிரகாசிக்கவும். இங்ஙனம் ஸர்வாதீத மான ஆத்ம ஸ்வருப உபசாந்த நிலையை அநுபவிக்க. விஷய சம்பந்தமான சுக துக்க சம்பந்தம் சிறிது மின்றிய நிரதி சயானந்த சுத்தவாயுவை நீ சுவாசிக்க வேண்டும். "இத்தேகம் நான், மனம் நான், இதுநான், அது நான்" என்னும் அநாத்ம பாவனையாகிற விஷத்தை உன் மனத்திற்குக் கொடாதே. வேதத்தின் பரமசித்தாந்தமாகிய அத்வைதத்தின் உயர்ந்த தத்துவமாகிய "ஸோஹம்" என்னும் அநுசந்தானத்தை ஒவ்வொரு நிமிஷமும் செய். இதை விட வேறு யுள்ள அநாத்ம பாவனையானது உன் னுடைய பரம புருஷார்த்த மாகிற அகண்ட நிலையின் வளர்ச்சிக்குப் பிரதி பந்தகமே யாகும். சுத்தமாயும் கேவல மாயும் இரு. இதுதான் உனது இயற் கைச் சுபாவம். உன் ஸ்வரூபம் கேவ லாத்வைதமே யாகும். சகளபாவனை (துவைத புத்தி) பயத்திற்கும்மரணத்

திற்கும் அதிசமீபமானது. அநந்தமே ஆநந்தமாம். ஆத்மாவின் அஸங்க நிரஞ்சன சுத்தத் தன்மையை வரவேற்பாயாக. இங்ஙனம் ஆத்மாநுபூதி பெற்று பேச்சற்று மனமற்று பரம சாந்த நிலையில் நிற்க.

உணர்பவனை யுணர்க. (ரூபத்தைக்) காண்பவனைக் காண்க. (சத்தத்தைக்) கேட்பவனைக் கேட்க. (அறிவை) அறிபவனைஅறிக. அப்போது உன்னை நீ அறிந்தவனாவாய். உன் உண்மை வடிவத்தையறிந்து, அங்ஙனமே ஒழுகுக. நீ தத்துவ ஸ்வரூபியாய் விளங்குக. இந்நிலையைக் கனவிலும் மறவாதே. பெண், மண் பொன் என்னும் உடைமைகள் நீயல்ல. உடைமை உடையவனைவிட வேறு. உடையவன் ஸ்வரூபம் வேறு. உடைமையின் ஸ்வரூபம் வேறு. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வைக்கப்பட்ட ஜலத்தின் தன்மை வேறு; கண்ணாடியின் தன்மை வேறு; எங்ஙனம் ஜலத்தின் ஸ்வரூபமான பிராணவாயுவும் ஜல

வாயுவும் கண்ணாடியின் ஸ்வரூபமன்றோ அங்ஙனமே, ஸ்தூல சரீரம், போக்கியமாயுள்ள விஷயாதிகள், பிராணன், மண், பெண், கௌரவம், பட்டங்கள் முதலியன உன் உண்மையான ஸ்வரூபமன்று. இவைகள் கேவலம் தோற்றம் மாத்திரமே. இவற்றில் ஒருகாலும் ஒட்டாதது உன் ஸ்வரூபம். உண்மை நிலை மனோவாக்குகளுக்கும் எட்டாதது ஜடமாகிய ஸ்தூல சரீராதிகளுக்கு இருப்பு உன் ஸ்வரூபந்தான். அவை உன் மனத்தினால் கற்பிக்கப்பட்டவைகள். ஆதலின் அவை ஆத்மத்தன்மையுடையனவல்ல. மற்றோ அனாத்மாக்களேயாம். ஆதலின் அகண்ட நித்தியானந்தமாயுள்ள உன் பிறப்புரிமையாகிய பிரத்தியக் தத்துவத்தை அபரோக்ஷமாய் அறிக. தேகம், மனம், புத்தி முதலியவைகளில் யானெனும் பாவனையும், விஷயாதிகளில் எனதெனும் பாவனையும் அற்று ஒழியும்படி பிரஹ்மோஹம் உண்மையை யறிந்து அனாத்ம அத்தியாஸங்களை யொழித்து

ஆத்மஸ்வரூபமாய் நிலைப்பாயாக. இது தான் நித்தியாநந்தப் பெருவாழ்வைப் பெருவதற்கான வழி. மண், பொருள், பொன் முதலிய ஆசைகளையும், தேக வாஸனையையும் விட்டொழிப்பாயாக. வேதாந்த ஸித்தாந்த ரகசியங்களை நன் கறிந்து ஆத்ம ஸ்வரூபமாயுள்ள உன்னை அகண்ட அபேத ஸ்வராஜ்யத்தில் நிலை பெற்று விளங்கச் செய்வாயாக.

ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணமாகிய மூன்று சரீரங்களின் நாசத்தினால்தான் பிரம்மாநந்தம் உண்டாகும். தேகத்தை எவ்வளவு சுத்தமாயும் ஒழுங்காயும் வைத்திருப்பினும் அந்தக் கரணம் சுத்த மாகிச் சாந்தப்படாவிடின் முக்தி கிடை யாதென்று நன்றாயறி. மனோ விருத்தி களை யடக்குதலன்றி வெளி வேஷங்கள் உலக மயக்கமேயன்றி மற்றன்று; வேஷத்தினால் எண்ணிறந்த பிறப்புக்களி லும் மோக்ஷம் உண்டாவதில்லை; இது சத்தியம்! ஆதலின் வெளி வேஷங்களை அறவே விட்டொழித்து அவிநாசியாயும்,

அஸங்கமாயும், நிர்விகாரியாயுமுள்ள ஆத்ம லக்ஷ்யத்தை அடையவேண்டும். உன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் பாவனு தீதமானது: அநித்திய வஸ்து பாவனை யழியுந்தன்மைத்தேயாகும். அகண்டாகார அறிவோடு கூடிய நிலை நித்திய மானது. ஸகல அத்தியாசங்களுக்கும் அதிஷ்டானமாயுள்ள ஸர்வானுஸ்யூத, வியாபக ஸத்தாஸ்வரூப ஆத்மாவில் ஸதா அபேதப்பட்டு நிலைப்பாயாக. இந் நிலையை அடைய, நீ ஞான அக்கினியால் திரிபுரங்களையும் சுட்டு எரிப்பாயாக—லிங்கசரீரம் நாசமானால்தான் பிறப் பொழியும். வறுபட்ட விதை எங்ஙனம் முளைக்கும்? "நான் சரீரமல்ல" என்னும் திடஞானத்தினால் ஸகல சரீரங் களில் யானென்னும் மயக்கமும் விஷ யாதிகளி(உலகத்தி)ல் எனது என்னும் அத்தியாசமும் நீங்குகின்றன.

நாமரூபப் பிரபஞ்ச காரணமான பிர கிருதியை நீ புன்சிரிப்போடுகூடிய ஆநந்

தப் பார்வையால் நோக்கின், அசத்து ஜட துக்கரூபமான அந்தப்பிரகிருதி உன்னுடைய பாததூளியைச் சிரசில் வகித்து உனக்கு அடிமையாகின்றது. பேரானந்தப் பிரவாகத்தை யுனக்குள் பெருக்கிப் புறத்திலும் வியாபிக்கச் செய். அத்யாத்ம வித்தையை அநுபவத்திற்குக் கொண்டுவராமல் பரோக்ஷமாய் மாத்திரம் இருக்க விடாதே. பரோக்ஷ சாஸ்திர ஞானம் வித்தியாகர்வத்தை யுண்டாக்கும். ஆதலின் ஆத்ம அபரோக்ஷ ஞானத்தில் அநுதினம் பழகு. உன்னுடைய தஹராகாசத்தில் விளங்கும் அத்விதீய மஹாமௌன ஸ்வரூபத்தை பிரகடனம் செய். நாமரூபப் பிரபஞ்சத்திற்கு அதீதமான நிலையே உன்னுடைய இருப்பிடமாம். நீயே பரம்பொருளாய் இருக்கிறாய். அவித்தையின் காரியமாய் வளர்ந்த ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களில் "நானென்"னும் தாதான்மிய உணர்ச்சியானது உனக்கு ஜன்மாந்தரங்களி

லிருந்து தொடர்ந்து வந்துள்ளது. இந்த மயக்க உணர்வைத் தத்துவ ஞானத்தினால் ஒழிப்பாயாக. தத்துவஞான மாவது, பிரஹ்மத்தை யுலகமென்று பாராமல் பிரஹ்மமாகவே பார்ப்பதாம். இப்பொழுது நீ பிரஹ்மத்தைப் பஞ்சேந்திரியங்களினால் சப்தாதி விஷய ஸ்தூல வடிவ உலகமாகவும், மனத்தினால் சங்கற்ப வடிவ ஸூக்ஷ்மப் பிரபஞ்சமாகவும் பார்க்கின்றாய்: இந்தப் பார்வையை யொழித்து, சப்தாதி விஷய வடிவமாகவும் சங்கற்ப ஸ்வரூபமாகவும் தோற்றும் உலகத்திற்கு ஸத்தாஸ்பூர்த்தியைத் தரும் ஒன்றைப் பார்க்க வேண்டும். இந்தப் பார்வையில்தான் உலகத் தோற்றம் ஒழியும்; ஆநந்தவெள்ளம் பெருகும்.

ரஜோகுண காரியங்களாயுள்ள காமம், குரோதம், பொறாமை முதலிய துர்விருத்திகளால்தான் உனக்குக் கெடுதி உண்டாகின்றது. ஆசையே சகல அநர்த்

தங்களுக்குக் காரணமாம், ஆதலின் ஆசையாகிய நோய் நம்மை யணுகா வண்ணம் நாம் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஒன்றை யடைய வேண்டும் என்ற எண்ணம் எந்த க்ஷணத்தில் உன் மனதில் நிகழுகின்றதோ அப்பொழுதே உன்னுடைய வியாபக வடிவம் கண்டிதப்படுகின்றது. ஆதலின் உன்னுடைய ஸ்வாபாவிக வியாபக ஸ்வரூபமானது நிராசையால்தான் விளங்கும்; "ஆசையறுதலே வீட்டின்பம் (மோக்ஷாநந்தம்) நேரே யடையக் காரணமாகும்."

ஆத்மா தனக்கு அன்யமான எதனையும் அனுபவிப்பதில்லை; எதனுலும் அனுபவிக்கப்படுவதில்லை. ஆத்மா சுவயம்பிரகாச அனுபவ சுவரூபம். ஆத்மபிரகாசத்தினுல் ஜடமான மனோபுத்தி சித்த அகங்காரங்கள் பிரகாசிக்கின்றன. ஆதலால் இவைகள் பராதீனமானவை, பரப்பிரகாசமுள்ளவை. கடபடாதி நாம

ரூப ஜகத் அப்பிரகாசமானது. தன்னை யும் தனக்கு அன்யமானவற்றையும் அறி யாமல் இருப்பது ஜடத்துவம். ஆத்மா சுவதந்திரமாயும் சர்வக்ஞமாயு முள்ள சைதன்ய சுவரூபம். அதனுடைய பிர காசத்தினால் தான் சூரிய சந்திர நக்ஷத் ராதி சகலமும் பிரகாசிக்கின்றன. பகலில் சூரியனும் இரவில் சந்திர தீபாதி களும் பிரகாசிப்பதுபோல் தோற்று கின்றன. ஆனால் அவற்றை பிரகாசிக்க வைப்பது நேத்திரம், நேத்திரத்தைப் பிரகாசப்படுத்துவது புத்தி, புத்தியைப் பிரகாசிக்கச் செய்வது லக்ஷயமான நான், அதாவது ஆத்மா. ஆகையால் யாவற்றிற்கும் முதன்மையாக பரஞ் ஜோதி சுவரூபமாயுள்ளது ஆத்மாவே. ஜீவ ஈசுவர பேதம் வாச்யமானது. லக்ஷயத்தில் பேதம் இல்லாவிடினும் பேதத்தை கிரகிப்பது முதலாவது பிராந்தி. ஆத்ம சுவரூபத்தில் கர்த்ருத்வ போக்த்ருத்வ குணங்கள் உண்மை யென்பது இரண்டாவது பிராந்தி.

சரீரத்ரயத்தோடு ஜீவன் அத்யாசம் அடைந்துளது என்பது மூன்ருவது பிராந்தி, ஜகத் விவர்த்தகாரணமான பிரம்மம் விகார முள்ளதென்பது நாலாவது பிராந்தி, காரணத்திற்கு வேருய் ஜகத் சத்யம் என்பது ஐந்தாவது பிராந்தி, இவ்வகையான பிராந்தி தத்வ விசாரத்தினுல் நீங்கும். சரீர பரிக்ரகத்தினுல் ஆத்மாவாகிய தன்னிடத்தில் துக்கம் தோன்றுகிறது. அஞ்ஞானம் அனுதியும் அநிர்வசனீயமும் ஆனது. அஞ்ஞானத்தினுல் அவிவேகம் உண்டாகிறது. அவிவேகத்திலிருந்து அபிமானம் பிறக்கின்றது. அபிமானத்தினுல் ராகாதிகள் உண்டாகின்றன. ராகாதிகளால் கர்மங்கள் ஏற்படுகின்றன. கர்மங்களால் சரீர பரிக்ரகம் (தேகேந்திரியாதிகளில் நான் என்ற அத்யாசம்) பிறக்கின்றது. சரீர பரிக்கிரகத்தினுல் துக்கம் தோன்றுகிறது. ஆதலால், துக்க நிவிருத்திக்காக சரீர அத்யாசத்தை விடுவதும், சரீர பரிக்ரக நிவி

ருத்திக்காக கர்மங்களையும், கர்மங்களின் நிவிருத்திக்காக ராகாதிகளையும், ராகாதிகளின் நிவிருத்திக்காக அபிமானத்தையும், அபிமான நிவிருத்திக்காக அவிவேகத்தையும், அவிவேக நிவிருத்திக்காக அஞ்ஞானத்தையும் விடவேண்டும். அஞ்ஞான நிவிருத்திக்காக தன்னுடைய சகஜ ஸ்வயம்பிரகாச நித்ய முக்த சுவதஸ்ஸித்த ஆத்மஸ்வரூப சாக்ஷாத்காரம் வேண்டும். ஆத்ம சுவரூப ஞானம் இல்லாமல் இருப்பது அஞ்ஞானம். இந்த அஞ்ஞானந்தான் சகல அனர்த்தங்களுக்கும் மூலகாரணம். அஞ்ஞானம் ஜடமானபடியால் ஆத்ம சைதன்யமான உன்னை ஆசிரயித்து விஷயமாகின்றது. புத்தியாதிகளின் விருத்தி ஞானம் மித்யா ஞானம், அதாவது விபரீத ஞானம். மித்யா ஞானத்திற்குக் காரணம் அஞ்ஞானம்; அதனுடைய காரியம் பிரவிருத்தி நிவிருத்திகள். குரு சந்நிதானத்தில் சிரவண மனன நிதித்யாசன மூலமாக தத்வமஸி மஹாவாக்கிய சப்

தார்த்த ஞான அனுபவத்திற்கு சம்யக் ஞானமென்று பெயர். இது ஆத்ம சுவ ரூப சித்தியை கரதலாமலகம்போல் செய் கின்றது. பிரம்ம வித்யை குரு முகத்தில் ஸ்திரமாயிருக்கின்றது. அவரிடத்தில் திடபக்தியினால் சிஷ்யன் அதை யடைய லாம். வேதாந்த வாக்கியங்களாகிய புஷ் பங்களிலிருந்து ஞானாமிருதமென்ற தேனை யெடுத்துப் பருகும்படி அளிப் பது குருவேயாகும்.

ஸ்வசக்தியென்பது சுவசுவரூப சுவ பாவமேயாகும். உதாரணமாக, பிரகாச ஸ்வரூபியான சூரியன் தன் பிரகாசத் தைத் தனதென்று அறிவதுதான் சுவ சக்தி. இவ்வாறு சுவசுவரூபமான ஆத்ம பிரஞ்ஞை, கல்பித நாமரூபங்களில் பிர காசிக்கும் ஞானம், ஞானத்தை யாசிர யித்த வியவகாரங்கள், அவற்றின் மூல மாக உண்டாகும் எல்லா அனுபவங்கள்- இவையாவும் பிரஞ்ஞா சுவரூபந்தான். சுவசக்தியை யாசிரயித்து இருக்கின்றது.

ஆகையால், ஆத்ம சுவரூபியான தன்னை ஆசிரயித்து ஜடமான தேகங்களும் லோகங்களும் இருக்கின்றனவே தவிர, தேகங்களையும் லோகங்களையும் தான் ஆசிரயித்திருப்பதல்ல. இவ்விதமான அநுபவ ஞானத்திற்கு சுவசக்தி யென்று பெயர். சுவசக்தியற்றவன் மூடன், பிராந்தன், அஞ்ஞானி, ஆத்மானுத்ம அவிவேகி. அந்த அவிவேகத்தில் பிரதி பலிப்பதுசக்தி. அதுவே பிரமசக்தி. உதாகரணமாக, தண்ணீரும் மண்ணும் கலந்தால் சேராகின்றது. இந்நிலையில் இரண்டும் வெவ்வேருகத் தோன்றுவது கிடையாது. அதுபோலவே ஆத்ம அனுத்ம கிரந்திரூபமான சந்தியில் பிரதி பலிப்பது சக்தி. இது உண்மையில் மாயிகமானது.

உலக நாட்டத்திலிருந்து திரும்பினல் தான் துக்கத்தினின்றுந் தப்ப முடியும். அகண்ட அத்விதீய நிர்விகார ஸ்வரூப ஆத்ம ஞானத்தைப்பெறத் தைரியமாய்

நிலைத்திரு. இதுதான் ஸம்யக்தரிசனத் திற்குச் சாதனமான அநுபவ முறை இம்முறையில் பழகினால் தான் நீ பிழைத் தவனாவாய்; அதாவது மரண பயத்தி னின்றும் தப்பியவனாவாய். உன்னுடைய வாழ்க்கையானது ஸ்வபாவமாயிருப்ப துடன் அஞ்ஞான நித்திரையினால் தூங் கும் ஒவ்வொரு ஜீவனையும் எழுப்பும் வேதாந்த சூரிய ஞானப்பிரகாசத்தோடு கூடியதாயிருத்தல் வேண்டும். இத் தகைய ஜீவியத்தினால் தான் உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் ஞானப்பிரகாசத் தைவியாபிக்கச் செய்ய முடியும். உன் னுடைய வாழ்க்கை ஆத்மலாபத்தையே பரம புருஷார்த்தமாய்க் கருதி அதை அடைவதிலேயே முயல்க.

உன்னுடைய ஹிருதய குகையில் அடங்கிக் கிடக்கும் ஆத்மீயசக்தியை யெழுப்பு. ஆத்மசக்தி வெளிப்பட்ட அந்த க்ஷணத்திலேயே வேதாந்தகேஸரி கர்ஜிக்கும். இந்தக் கர்ஜனையால் அவித்

தியாகாரிய ஙர்மரூப நரிகள் தங்கள் இருப்பிடமாகிய வளைகளுக்குள் ஓடி மறைகின்றன; அப்பொழுது நீ நிர்விகார சுத்த ஸ்வயம் பிரகாசமாய் விளங்குவாய்.

நீ உன் மகிமையில் நின்று எல்லோரும் அறியும்படி ஆத்ம தத்துவத்தைப் பறையறைவாயாக. ஸ்வபாவமாயுள்ள ஆத்ம தத்துவத்தை உலகமெங்கும் புநருத்தாரணஞ் செய். ஸர்வாதீத நிலையிற் சதா பழகு. இதனால் வெளிப்படும் பிரஹ்மாநந்தமானது அஸத்து ஜடதுக்க ரூப உலக அழுக்கைச் சுத்தப்படுத்துவதுடன், பவரோகத்தையும் ஒழிக்கின்றது: சிற்ஜடக்கிரந்தியின் காரியமாய் மயக்கத்தால் தோன்றும் மித்தியாஜகத்து உன்னை மயக்காது. ஆதலின் உன்னுடைய வாழ்நாள் முழுமையும் அதீத நிலையையே மேலான நோக்கமெனக் கொண்டிருத்தல் வேண்டும். நீ முக்காரணங்களால் எதை நினைப்பினும், எதைப்

பேசினும், எதைச்செய்யினும், ஆத்ம நாட்டத்திலேயேயிருக்க வேண்டும். இதுதான் வேதாந்த வாழ்க்கை. இத்தகைய வாழ்க்கையோடு கூடியவனாய் ஸமத்துவத்தை யடைந்து அகண்டமாய் விளங்கு. இங்ஙனம் விளங்கினால்தான் மஹரிஷிகளின் சந்ததியிற் சேர்ந்தவன் நானென்று கூறிக்கொள்ளுதல் பயனுடையதாகும். நீ விசுவாச முடைய வனாய் ஸதா உன்னிலேயே ரமித்து அபரோக்ஷஞானக் கொடியைக் கையில் பிடித்து உலகமறியக் காட்டுவாயாக. ஏகமாயும், அத்விதீயமாயும், அபயமாயும், நிர்விசேஷமாயும் விளங்கும் ஆத்ம ஸ்வரூபத்தை அதிகாரிகளாயுள்ள யாவரும் அறியக்கூடும். இதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆத்மாவை யறிந்தவன் ஸ்வராஜ்யத்தைப் பெற்றவனேயாகும். ஆதலின் நீ நிர்விசேஷ சின்மாத்ர ஆத்ம ஸ்வரூபமாகவே விளங்குவாயாக.

கற்பிதமாகிய ஸகல த்வந்த்வங்களினாலும் விகாரப்படாத சின்மாத்திர

ஸ்வரூபத்தைச் சந்ததம் வெளிப்படுத்து. உண்மை நோக்கில் நீ ஸகல நாமரூபப் பிரபஞ்ச பாசங்களினின்றும் விடுபட்டவனு யிருப்பதால், எப்பொழுதும் அசங்கசாக்ஷியாய் விளங்கு. நீ உலகத்திற்குக் கீழ்படிந்து விஷயங்களில் உன் மனதைச் செலுத்துவாயானுல் அது உன்னைக் கெடுப்பது நிச்சயம். லோக வாஸனைதான் உன்னை மயக்கித் துன்பத்திற்கு ஆளாக்குவது. ஆதலின் ஜீவ பாவத்திற்கு காரணமாகிய "யான் எனது" என்னும் தேகவாஸனை லோக வாஸனைகளை நாசஞ்செய். வாஸனுக்ஷயத்தில் இந்த உலகமே சிவமாய் விளங்கும். ஒரு க்ஷணகாலம் நீ பிரஹ்மத்தை அறிவாயாகில் அது உன்னைப் பாவனமாக்கிச் சதா அந்தர் முகமாகவே யிருக்கச்செய்யும். ஆதலின் கற்பித ஜீவ பாவத்தை யொழித்து உண்மையான உன் ஆத்ம ஸ்வரூபத்தை அறிதல் வேண்டும். உன்னை நீ யறிவாயாகில் உனக்கு ஒரு கேடுமில்லை. இந்த உலகம்

உன்னை மயக்காது; அன்றியும் நீ உன்னுடைய ஸ்வாபாவிக ஆத்மீய சக்தியையும் பரிசுத்தத்தையும் அடைந்து (விசாரிக்காதபோது அதிரமணீயமாய் விளங்கும்) மாயாவிலாஸ லௌகிக விருத்திகள் உன் மனத்தில் சற்றும் பந்திக்காமல் செய்யவேண்டும். நீ எப்பொழுதும் பரப்பிரஹ்ம ஸ்வரூபத்தில் அமிழ்ந்து அபேதமாய் விளங்க வேண்டும். இது ஜீவன் முக்திநிலை. இந்த நந்நிலையைப் பெற்றால் நாமரூபப் பிரபஞ்சக் கல்லானது பொடியாக்கப் பட்டு அதற்கு அதிஷ்டனமாயுள்ள ஸச்சிதாநந்த ஸ்வரூபம் அபரோக்ஷமாகும். லௌகிக விஷய சுகங்களில் இச்சை வையாதே. ஈஷணத்திரயங்களை எரித்துவிடு. உன்னுடைய உண்மையான அத்விதீய ஸத்தா ஸ்வரூப ஞானத்தால் ஸதா ஆத்ம ஸ்வரூபத்தில் மூழ்கி அவ்வடிவமாகவே நிலைத்திரு. இன்றேல் விஷயாதிவடிவ உலகமாகிய தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படுவாய். அப்

பொழுது நீ ஜீவனுகிருய். உடனே நாக மாகிய சரீரம் கற்பிக்கப்படுகின்றது, இதனுல் ஸகல அநர்த்தங்களும் ஏற்படு கின்றன. ஆதலின் ஜீவபாவத்தையும் சரீரத்தையும் ஞானுக்கினியால் சுட்டெரி இங்ஙனம் செய்யின் உலக நாட்டமாகிய உமியும், தூசும் அழுக்கும் அறவே நீங்கும்.

அகண்ட ஆத்ம ஞானத்தால் உன் னுடைய ஸ்வேச்சா கீதம் பாடு. ஸ்வரூப ஆநந்தம் உன் முகத்தில் பிரகாசிக்கட்டும்; உபசாந்தம் உன் முகத்தில் குடிகொள் ளட்டும். இது நீ ஸத் (ஸ்வஸ்வரூபத்) தில் நிலைத்திருப்பதைக் காட்டுங்குறி. இதுவரையில் உன்னுல் கற்பிக்கப்பட்டு உன்னை மூடியிருந்த திரிபுடியாகிற அஞ் ஞானுந்தகாரமானது ஆத்ம பாஸ்கரன் முன் நிற்குமா? உன்னுடைய தூக்கம் ஒழியும்; துன்பங்கள் யாவும் நாசமாகும். ஆசைகள் அறும். நீ அகண்ட ஸ்வரூப மாய்ப் பேராநந்த வடிவமாவாய். அப் பொழுது நீ தேசகால வஸ்து பரிச்சேத

மற்றவனுவாய். தானுகவே நிலைக்கும் ஞானமாகிய நிலையினின்றும் கொஞ்சங் கூட நழுவமாட்டாய்.

புருஷார்த்தம் மரணமல்ல. பிரிவினை யினுலும் பேதபாவத்தினுலும் ஏற்படு வது மரணமேயாம். ஆதலின் துவைதப் பிராந்தியை நீக்கி, அபேத தரிசனரூப உண்மை ஞானத்தைக் கொள்க. பேதங் களில் ஸமத்துவத் (அபேதத்)தையும், நாணுத்துவத்தில் ஏகத்துவத்தையும் பார்ப்பதே சிறந்த உத்தேசமாய்க் கொள்க. ஆத்மாவை அறிவதே சிறந்த புருஷார்த்தமாகும்; "அஹம் பிரஹ் மாஸ்மி" யென்று அறிவதே பரமபுரு ஷார்த்தம்; வியாவகாரிக நாமரூபப் பிர பஞ்ச அதிஷ்டான ஸத்தா ஸ்வரூபத்தை யறிவதுதான் உன்னுடைய பெரும்பய னுகும். எல்லா மதங்களுக்கும் எது முடிவோ, அதுதான் நீ அடையவேண் டிய ஸ்தானமாகும். கேவலமாயும் அத் விதீயமாயுமுள்ள நிலையே உனக்கு ஸ்வ பாவமானது. எல்லாம் நீயே. இங்ஙன

மிருப்பதை நன்குணர்ந்தால் உனக்குத் துன்பமென்பதே கிடையாது; ஆசா பிசாசு உன்னை அணுகாது; நீ பயமற்று விளங்குவாய் அபயவடிவமாய். விவ காரங்களாகிற மூடுபனி உன்னை மறைக் காது. (தத்துவ) ஞானதீபம் ஸதா பிரகாசித்துக்கொண்டிருக்கும். பயகா ரணமாகிற தேஹோஹம் பாவனை அத்தி யந்தம் நாசமாய்விடும். உன்னுடைய வாழ்க்கையானது உலகத்திற் சிக்கித் துன்புறுமல் நீ பரிபூர்ணமாய் விளங்கு வாய். எந்த நிலையில் வேதாந்த சித்தாந் தமும் அபயஸ்வரூபமும் ஏகமாயும் அத்'வி தீயமாயும் உள்ள ஒன்றில் அபின்னமாய் விளங்குமோ, அது முடி வானது. சுருங்கக்கூறின் ஸர்வாதார மான ஆநந்தமே பரம புருஷார்த்த மோக்ஷமாம்.

உன்னை நீசனென்றும் பாவியென்றும் சொல்லிக்கொள்ளாதே. "யத்பாவம் தத்பவதி" நினைக்கும்வண்ணம் ஆகி

ருன். “விதைக்கும் வண்ணம் அறுக்கிருன்” என்னும் பழமொழிப்படி ஒருவன் நினைப்புக்குத் தக்க பழக்கமும் பழக்கத்திற்குத் தக்க குணமும், குணத்திற்குத் தக்க தொழிலும், தொழிலுக்குத் தக்க வாஸனையும் ஏற்படுகின்றன. ஆதலால் உன்னை நீ இழிவுபடுத்தி நீசனென்றும் பாவியென்றும் நினைத்துக் கொள்வதனுல் அங்ஙனமேயாகிருய். உண்மையில் நீ தாழ்ந்தவனல்ல. எண்ணந்தான் ஒருவனைத் தாழ்த்துவதும் உயர்த்துவதுமாகும். உயர் குலத்திற் பிறந்த கர்ணனைத் தாழ்த்தியது அவன் எண்ணமேயன்ருே? ஆதலின் நீ எப்பொழுதும், உயர்ந்தவனுகவே கருதுவாயாக. ஆத்மாவைக் காட்டிலும் உயரிய பொருள் உலகத்தில் இல்லை யாதலால் பிரஹ்மஸ்வரூபமாகிற ஆத்மாவே நானென்று அறி. ஒவ்வொருவனும் ஆநந்தத்தையே தேடுகிருன். ஆநந்தம் விஷயாதிகளில் இல்லை; மற்ருே அது ஆத்மவடிவமே. இந்த உண்மையை அறி

யாமல், எங்ஙனம் பசையற்ற எலும்பைக் கடிப்பதனுல் வாய் அறுபட்டுத் தன் வாயினின்றும் பெருகும் இரத்தத்தைச் சுவைத்து நாய் சந்தோஷப்படுகின்றதோ, அங்ஙனமே ஜீவர்கள் விஷயாதிகளிலிருந்து ஆநந்தம் வருகின்றதென்று மயங்குகிருர்கள். உண்மையில் ஆநந்தம் பிரத்தியக் ஆத்மாவே. அறியாமையே ஸகல பேதப்பிரதீதிக்கும், அதனுல் ஸகல துன்பங்களுக்கும் காரணமாகின்றது. ஆதலால் தேஹோஹம் பாவனைசெய்து விஷயாநந்தச் சதுப்பு நிலத்திற் சிக்கிக் கொள்ளாமல் "சிவோஹம்" என்று உணர்ந்து எங்குமாயும் எல்லாமாயும் என்றுமாயும் உள்ள உயரிய நிலையை அடைவாய். இந்நிலையை அடையச் செய்யும் குருப்ரஸாத மஹாமந்த்ரம்.

ஸகல பாஹ்யப் பிரவிருத்திகளையும் விட்டு ஆத்மாவிலேயே நிலைத்திரு. வெளியே விஷயாதிகளை நாடினுல், அதனின்றும் திரும்பி உண்முகப்படுவது

மிகவும் கஷ்டம். வெளி விஷய நாட்டத்திற்குக் காரணமாகிய ஆசையையொழித்தாலன்றி துன்பம் ஒழியாது விஷயாதிகளில் ஆநந்தம் உளதென்னும் பிரமையினுல் ஆசையும், அதனுல் பிரவிருத்தியும், அதனுல் கருமமும், அதனுல் இருவினைகளும், அவற்ருல் சுகதுக்கங்களும், இவற்றின் அனுபவத்தின் முடிவில் மரணமும் உண்டாகின்றன. உண்மையில் ஆத்மா இறப்பதன்று. ஆத்மாவைக் கத்தி வெட்டாது. நெருப்பு எறிக்காது; ஜலம் நனைக்காது; காற்று உலர்த்தாது. கத்தி முதலியன வெட்டுவதாயும் எரிப்பதாயும், நனைப்பதாயும் நினைப்பது மயக்க உணர்வேயாகும். பஞ்சபூதங்களும் உன்னிடத்தில் கற்பனையால் விளங்குகின்றன. நீ அவற்றிற்கு ஆதாரமாயிருக்கிருய். அத்தியாஸமாயுள்ள அவற்றிற்கு ஸத்தையைக் கொடுப்பவன் அதிஷ்டானமான நீயே. அத்தியாஸ கற்பனையின்றேல் அநர்த்தங்கள் இல்லை; மரணமும் இல்லை.

திரிபுடி கற்பனையுள்ளபோது நீ ஜீவனு கிறாய். ஜீவபாவ மற்ற காலத்தில் திரி புடித்தோற்றமில்லை; ஸகல அநர்த்தங் களுமில்லை. நீயே பிரஹ்மமாய் விளங்கு வாய். இதுதான் ஞான பராக்கிரமம்.

நீ பிரஹ்மத்தை யறிவாகில் சூரியன் முதலிய கிரகங்கள் உன்னுடைய தயவை எதிர்பார்த்து உன்னை வணங்கும். துக்க ரூபமான உலகம் உன் வசமாய் நின்று ஆநந்தமாய் விளங்கும். சச்சிதாநந்த நாட்டத்தில் நாமரூப வடிவ உலகம் நாசமாகின்றது. ஸங்கத்துவ தோஷத் தினால் இந்த உலகம் அத்தியசிக்கப்பட் டிருக்கின்றது. உலகத்தோடு சம்பந்தப் பட்டவனென்று நீ கருதினால் நிர் விசேஷ சின்மாத்ரத்தை அறியமாட் டாய். நிர்விசேஷமாயும் அஸங்கமாயு முள்ள சச்சிதாநந்தத்தை யறிந்தால் தான் நீ பிழைப்பாய். நாமரூப உலக எண்ணங்களுக்கு மனத்தில் இடந்த ராதே. இந்த உலகத்தை நரகத் துவார

மாயிருக்கச் செய்யக் கூடா தென்பதை ஒருகாலும் மறவாதே. எப்பொழுதும், நீ நாமரூப உலகத்தில், நிர்விகார ஸத் ஸ்ரூபத்தைப் பார்த்தல் வேண்டும். சஞ் சலத்தில் அசலமாயும், சரீராதிகளில் அசரீரியாயும் உள்ள இந்த பாரமார்த்திக ஸத்ஸ்வரூபத்திலிருந்துதான் ஸகல நாம ரூபப் பொருள்களும் தோன்றுகின்றன. இந்த பூராஸத்தை அறிந்தால் எல் லாம் அறியப்பட்டனவேயாகும். அப் பொழுது நீ மாத்திரம் தானே தானாய் சிதாகாசத்தில் ஆநந்த தாண்டவஞ் செய் வாய்.

கடபடாதிகள் ஸகலமும் பாஹ்ய திருச்யங்கள். தேகத்தில் கரசரணாதி யவயவங்கள் மத்ய திருச்யங்கள். மனசு புத்தி சித்த அகங்காரங்கள் ஆந்தர திருச்யங்கள். இவை மூன்றும் திருச் யவர்க்கத்திற் சேர்ந்தவைகளே. ஸகல திருச்யங்களும் அநிருத ஜடதுக்க மானவை. இவைகளுக்கு விலக்ஷண

மாய் ஸாக்ஷியாய் இவைகளைப் பிரகாசப் படுத்தும் சைதன்யம் திருக்சொரூப மாகவும் ஸத்து சித்து ஆனந்த சொரூ பமாகவும் உள்ள உன் சொரூபமாகவே அறி. இது உன்னுடைய சகஜநிலை. சிந்தையும், மொழியும் செல்லா நிலை மைத்தாகிய ஆத்மஸ்வ ரூபத்தை வைகரீ வாக்கினால் எங்ஙனம் மொழியலாம்? பௌதிக மனத்தால் எங்ஙனம் நினைக்க லாம்? முடியாத காரியமே யாயினும் அபயஸ்வரூப மோக்ஷத்தை விரும்பும் ஒவ்வொரு முமுக்ஷுவுக்கும் வாக்ரூப மான சாஸ்திரங்கள் வேண்டியனவே யாகும். அஞ்ஞான அகங்காராதி ஜன்ம மிருத்யு பரம்பரை ஸம்யுக்தமான ஸம் ஸாரத்தை வித்யை என்ற மரக்கலத்தால் தாண்டவேண்டும். ஸமம், தமம், திதிக்ஷை ஸமாதி வைராக்யம், உபரதி, விவேகம் முதலான உபாயங்களால் ஆத் மாவில் ஆத்மாவை அறி. அப்பொழுது ஸர்வமும் ஆத்ம ஸ்வரூபமாகவே விளங் கும். ஸமஸ்த பூதங்களும் எதிலிருந்து

தான்றினவோ, எதில் நிலைத்திருக்கின் றனவோ, எதில் லயமடைகின்றனவோ அதிஷ்டானமான அவ்வாத்ம ஸ்வரூப மேஸாக்ஷாத்கரிக்கத் தக்கது. எது திருச்யமோ அது திருக்கைக் காணுது. எது திருச்யமோ அது மித்யை. யதார்த்தத்தில் திருச்யத்திற்கும் திருக் குக்கும் ஒரு காலத்திலும் சம்பந்தமில்லை. ஸர்வஸாக்ஷியான எந்த ஆத்ம ஸந்நிதா னத்தால் திரஷ்டா விஷயங்களைக் காண் கின்றுனே அவன் விஷயியைக் காண மாட்டான். ஆத்மா தனக்கன்னியமாக எதையும் அறியாது. பேதத்தைப் பார்க் கும் இரண்டாவது சைதன்யம் கிடை யாது. பாரமார்த்திகமாக, ஆத்ம ஸ்வ ரூபம் ஏகமே வாத்விதீய ஸாக்ஷாத்கார ரூபமானது. எந்த லாபத்துக்குமேல் வேறு லாபமில்லையோ, எந்த சுகத்துக்கு மேல் வேறு சுகமில்லையோ, எதை யறிந் தால் அதன்பின் வேறொன்றை யறிய வேண்டியதில்லையோ, எதைத் தரிசித் தால் ஜனன மரண ரூபமான ஸம்ஸார

பரம்பரை அற்றுப்போகின்றதோ, அது பரம புருஷார்த்தம். இதர ஸாதன அபேக்ஷையில்லாமல், ஒரு ஸாதனையினால் நூதனமாக ஸித்தியாகாமல் ஸ்வதஸ்ஸித்தமாய், நித்ய முக்தமாய், ஸ்வயம் பிரகாசமாய் உள்ள ஆத்ம வஸ்து நமது லக்ஷ்யம். அநாதியாய் ஸம்ஸ்கார ரூபமாய் வியவசாரதசையில் காணும் திரிபுடிபேதமான—காண்பான் காட்சி காணப்படும்பொருள்களை அவற்றின் வாஸனைகளோடு உபேக்ஷிக்க வேண்டும். இவைகளில் அனுசூதமாய் அந்தர்க்கதமாய் அதிஷ்டானமாய் கூடஸ்தமாய் நிர்விகாரமாய் நிராகாரமாய் ஸ்வயம் பிரகாசமான பிரத்யகாத்ம ஸ்வரூபந்தான் ஒவ்வொருவரும் ஸாக்ஷாத்கரிக்கவேண்டிய லக்ஷ்யம். அதுதான் நம் மொவ்வொருவரின் ஸ்வஸ்வரூபம். மாயை அநாதியானாலும் ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்கார ஞானத்தால் அந்தமடையும். நமது யதார்த்த ஸ்வரூபம் பரப்ரஹ்மம்; அது காரண காரியரஹிதம்.

உள்வெளியற்றது. முன்பின் இல்லாதது. ஆதிமத்ய அந்த மற்று ஸர்வ வியாபகமாய் ஸர்வ கால ஸர்வ அவஸ்தைகளிலும் பரிபூரணமாய் இருப்பது. அது ஸமஸ்த அனுபவங்களுக்கும் அனுபவஸ்தானம். நமது ஜீவிதத்துக்கு ஞான நேத்ரமானது. ஸமஸ்தப் பிரமாணங்களுக்கும் பிரமாணமானது. பிரமாணங்கள் எல்லாவற்றுக்கும் முன்பாகவே ஹேது திருஷ்டாந்தமின்றியே ஸித்தமாகவுள்ளது. அஞ்ஞான கல்பிதமான காயிகவாசிக மானஸிக விக்ஷேபங்களுக்கு அதீதமானது. ஜன்மங்கள் எல்லாவற்றிலும் பிரம்மவித்தை எளிதல்ல. எந்த ஜன்மத்தில் சிஷ்ய லக்ஷணங்கள் ஒருவனுக்குப் பூரணமாக அமைகின்றனவோ, அப்பொழுதே ஸ்வஸ்வரூப ஸாக்ஷாத்கார ரூபமான பிரம்மவித்தை பிராப்தமாகின்றது. பிரம்மஞானி எப்பொழுது எல்லாவற்றையும் தன் ஆத்ம சைதன்ய விலாசமாகவே அபேதமாகப் பார்க்கின்றானோ அப்பொழுது அவன்

எதை எதனல் எப்படிப் பார்க்கக்கூடும்? கேட்கக்கூடும்? பேசக்கூடும்? நினைக்கக் கூடும்? ஸமஸ்தத்தையும் அறிகின்ற சுத்த விஞ்ஞான சொரூபமேதான். பிரஞ்ஞான ஆத்மசொரூப ஞானி சுயமாகவே பிரகாசிக்கின்றான். ஸமஸ்தத்தையும் அறிகின்ற ஆத்ம சைதன்யம் அத்விதீயமாய், அக்ஷரசொரூபமாய், பார்க்கப்படுவதற்குத் தான் விஷயமாகாமல் திருக்சொரூபமாய், கேட்கப்படுவதற்கு விஷயமாகாமல் மௌனசொரூபமாய், மனம் புத்திகளுக்கு விஷயமாகாமல் பிரஜ்ஞா சொரூபமாய், மேலும், காண்பானுவது, கேட்பானுவது, நினைப்பானுவது, அறிவானுவது தனக்கன்னியமாக இல்லாமல் இருக்கின்றது. அதுதான் உன்னுடைய சொரூபம். தத் த்வம் அஸி.

ஓம் தத் ஸத் பிரஹ்மார்ப்பணமஸ்து,

BOOKS by

Dr. T. M. P. Mahadevan, M.A., Ph. D.

(Head of the Dept. of Philosophy, Madras University)

The Philosophy of Advaita (with special reference to Bharatitirtha-Vidyaranya); pp. xvi+284 ; price Rs. 5.

The Upanishads (Selections from the 108 Upanishads with English Translation; pp. xxxii+400; price Rs. 2. (*Third Edition*).

Outlines of Hinduism; pp. 128; price Re. 1.

The Fundamentals of Logic; pp. lxxii+342; price Rs. 4. (*Third Edition*).

Whither Civilization and Other Broadcast Talks : pp. 112; price Rs. 2.

Critique of Difference or the Bhedadhikkara : joint Author with Prof. S. S. Suryanarayana Sastri ; pp. xiv+52 ; price Re. 1.

Gaudapada : A Study in Early Advaita. In the press. To be out in Jan. 1952.

UPANISHAD VIHAR

Kailasagiri, Panagal Post, Chittoor Dt.

BOOKS by

"Vedanta Pithamaha", "Gnana Bhaskara'

Sri Swami Rajeswaranandaji Maharaj, M.A., D.Litt. (V.U.)

Words of Wisdom: These are notes from the leaves of the Author's diary and attempt to lift life out of commonness, administering a balm for all the hurts of mankind and wounds of the world. Pages 214.

Know Thyself: Pregnant in meaning, pointed in application and furnishes a spiritual climate throughout life. Second edition, pages 230.

Life, Light and Love: One cannot but admire the freshness of the rhapsodies, the beauty and force of spontaneity patent in every line of the book. Second edition, pages 136.

Revelation: A translation in poetry of Sri Ramana Maharishi's 40 verses. Pages 48.

Flashes of Peace: A collection of editorials from the "Peace" Magazine. Pages 128.

Atma Sudha: A collection of Vedantic Texts together with their meanings. Pages 144.

Your Birthright: This book will serve as a life-mate in the pilgrimage of the soul to the destination of Self-realization. In the press. To be out in December 1951. Please reserve your copy.

உபநிஷத் விஹார்

கைலாசகிரி, பானகல் போஸ்ட்,
சித்தூர் ஜில்லா.

காளஹஸ்தி கைலாசகிரி அடிவாரத்தில், சுவர்ணமுகீ நதிக்கரையில், சுமுகமான சூழ்நிலையில் உபநிஷத் விஹார் அமைந்துள்ளது. திவ்ய ஜீவனத்திற்கு மிகவும் உகந்தது. அது ஆத்ம வாழ்க்கையில் யாவருக்கும் பயன்பட உழைக்கின்றது. ஐக்யம், அன்பு, சாந்திஸ்வரூப ஸாக்ஷாத்காரம்—இவை அதன் நோக்கங்கள். உபநிஷத் விஹாரில் கொஞ்ச காலத்திற்கோ அல்லது நீண்ட காலத்திற்கோ இருக்க விரும்புவோர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஸுவ்ராநந்த சுவாமிகள் அவர்கட்கு மேற்கண்ட விலாசத்தில் விவரமாக எழுதலாம்.

YOUR BIRTHRIGHT

For Assimilation

and Application in Daily Life

BY

"Vedanta Pithamaha", "Gnana Bhaskara"

Sri Swami Rajeswaranandaji Maharaj, M.A., D.Litt.

" This book will serve as a constant companion that lifts life to the sun-lit heights of truth, wisdom and bliss. It will be a life-mate in the pilgrimage of the soul to the destination of Self-realization. It is made available to seekers after Truth with the fervent prayer that it will give them solace, and afford them gleams wherewith to conduct their grand March to the Eternal."

In the press : To be out in Jan. 1952.

Please reserve your copy immediately by dropping a post card to **Dr. T. M. P. Mahadevan, M.A., Ph.D., Head of the Department of Philosophy, University of Madras, Triplicane Post, Madras.**